**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**D.V.C. No. 1/2023**

| | | |
|---|---|---|
| L.W. P.W. 1 | | |
| D.W: | | |
| Name: | பாரதி | Caste: |
| Father's Name: | க/பெ. பிரகாஷ் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age: 26/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2024.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தற்போது வடமழை மணக்காடு கிராமத்தில் எனது தகப்பனார் வீட்டில் வசித்து வருகிறேன். நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. நான் சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டு அங்கு தங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 வது எதிர்மனுதாரர் பெங்களூரில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரி. 4 வது எதிர்மனுதாரர் சென்னையில் உள்ளார் என்றால் சரி. 3 வது எதிர்மனுதாரர் 2014 முதல் பெங்களூரில் குடும்பத்துடன் தங்கி பணிபுரிந்து வருகிறார் என்றும், தேவையில்லாமல் அவரை வழக்கு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. அவர் விடுமுறைக்கு இங்கு வீட்டிற்கு வருவார்.

17.06.2022 ல் சென்னையில் எனக்கு திருமணம் நடைபெற்று 20.06.2022 ல் மணக்காடு கிராமத்தில் திருமண வரவேற்பு நடைபெற்றது. என் மனுவில் 22.06.2022 ல் திருமண வரவேற்பு நடைபெற்றது என்று கூறியுள்ளேன் என்றால் அது ஒரு எழுத்துப்பிழை. எனக்கு என்ன சீர்வரிசை செய்யப்பட்டது என்று எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட நகைகயை நான் எடுத்து வந்து விட்டேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரருக்கு சீர்வரிசையாக கொடுக்கப்பட்ட 4 பவுன் செயின் மட்டும்தான் அவரிடம் உள்ளது என்றால் சரியல்ல. 7 பவுன் நகைகள் சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது. வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எனக்கு 6.1/4 பவுன் சீர்வரிசையாக

கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 5 பவுன் சீர்வரிசையாக கொடுத்தார்கள். அதில் செயினை தவிர மற்றவைகளை வாங்கிகொண்டார்கள். வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, is my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.

DM-cum-JM,
Vedaramyam